| கல்வி அமைச்சு<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை 2013<br>முன்னோடிப் பரீட்சை | | |
|---|---|---|
| தமிழ் 1 | T 1 | மூன்றுமணித்தியாலங்கள் |

அறிவுறுத்தல்கள்

- பகுதி 1 இல் உள்ள முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும்
- பகுதி 11 உள்ள ஆறு வினாக்களுக்குள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி 1

01. வான் கண் அற்று, அவன் மலையே,வானத்து
மீன் கண் அற்று,அதன் சுனையே ஆங்கு
மரம்தொறும் பிணித்த களிற்றினீர் ஆயினும்
"புலம்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்,
தாளின் கொள்ளலிர்,வாளின் தாரலர்,
யான் அறிகுவென்,அது கொள்ளும் ஆறே
சுகிர் புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர,
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே"

அ .பாரி மன்னனின் வீரம் புகழப்படும் விதத்தை விளக்குக.
ஆ. பரம்பு மலையின் இயற்கை வளம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
இ. சங்ககால புறத்திணைப் பண்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?
உ. பாரியின் தமிழ்ப்பற்று புலப்படும் விதம்?

ii) அலைய லைந்தனர் கூப்பியதாமரை
யிலைய லைந்தலை மீதெழுந்தாடலந்
நிலைய டைந்தனர் நீங்கலிர் நின்மினென்
றுலைவ டைந்துகை கூப்பிய தொத்தவே

நாக நெற்றியி னன் மணி யோடைபோ
நாக நெற்றியி னன்மணி யானுபாய்
நாக நெற்றியி னன்மலர்க் காவப்பா
நாக நெற்றியி னன்மதி தோன்றிற்றே

அ) இச் செய்யுட்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை எழுதுக:
ஆ இச் செய்யுட்களில் இடம்பெறும் அணிகளைக் குறிப்பிடுக:
இ) 'நாகம்' என்ற சொல் குறிக்கும் பொருள்களைத் தருக:
உ) இப்பாடல்கூடாக கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயம் யாது?

(24 புள்ளிகள்)

2) ‘அ’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

அல்லது

‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

அ) பத்தாம் திகதியில் சம்பளமாம் -- சின்னப்
பையனுக்குகோ பெரும் கொண்டாட்டம்
மொத்தமாக சம்பளம் வாங்கிடுவா அம்மா
முழுசா ஒரு ரூபா தந்திடுவா என
சித்தம் நிரம்பிய ஆசையிலே தன்
தோழர் பலருக்கும் சொல்லி வைத்தான்
முத்தம்மா சம்பளம் வாங்கி வந்தாள் - அவன்
முதுகில நாலு கொடுத்து வச்சாள்.

வாழைப்பழம் ......மிட்டாய் முறுக்குவடை
வாங்குங்க ! வாங்குங்க! என்று இந்த
ஏழைங்க காசைப் பிடுங்கிடவே வந்த
வியாபாரிகள் இடும் கூச்சல்களும்
ஊளை ஒழுக வாய் எச்சில் வடிய தன்
உள்ளத்திலே பெரும் ஆசையுடன் - அம்மா
சேலை முந்தானையைப் பற்றிக் கொண்டே வரும்
செந்தாமரையோ சிணுங்கிடுவாள்.

சீவி முடிச்சி சிரிக்கலைன்னா? நல்லா
சிங்காரம் பண்ணி தளுக்கலைன்னா
பாவிப் பய அரைப்பேரு போட்டான்? அவன்
பாடையிலே போக மாட்டாக,என
ஆவி துடிக்கச் சுமந்து வந்தும், தினம்
அரைப் பேரு போட்டல்ல வச்சிருக்கான்
கேவியழுது புலம்பிக்கொண்டே வரும்
குப்பாயி நெஞ்சில் பெரு நெருப்பு

காமாச்சிக்கு எம்பத்தஞ்சிரூபா அது
கையிலே வாங்கிட்டா பாத்தியாடி ,சுத்த
சோமாறி வேலைக்கு போக மாட்டா போனா
சொந்த வேலை துப்புப் பட்டிடுவா
ஏமாளி கந்தன்அவ புரு‘ன் -அவ
இழுத்த இழுப்புக்கு வளையுறானே – என
உரோமஞ் சிலிர்க்க வசை பாடும் - சின்ன
ருக்குமணிக்கோ வயித்தெரிச்சல்

சீட்டுப் பணத்த நான் கட்டுவேனா?பட்ட
சில்லற கடன் அடைப்பேனா? –அந்த
சேட்டுப்பய மலைபோல வந்து பெருந்
தொல்லை கொடுப்பான் கடன் கேட்டு
ஈட்டுக் கடையில் வைச்ச நகையினை
இந்த மாசம் திருப்பல்லன்னா ஏலம்
போட்டுடுவானாம், என்ன செய்வேனென
புலம்பும் வள்ளியொரு பக்கத்திலே

பள்ளிக்கூடம் போகும் சின்னமகளுக்கு
பாவாடை ரவிக்கை தைக்கவேணும்
வள்ளி மகளின் சடங்குக்கு அஞ்சி ரூவா
வாச்சும் மொய்யா எழுதிடணும்
கொள்ளைக்காரப் பய ஒத்த கடைக்கும்
கொடத்திடணும் போனமாசக் கடன்
உள்ளத்தில் எண்ணி அடுப்பருகில் சும்மா
உட்கார்ந்திருக்கிறாள் பாப்பாத்தி

நாட்டுக்குப் போயி குடிச்சுப்பிட்டு சில
நாதாறிப் பசங்கள கூட்டி வந்துகரு
வாட்டுக் கறி வேணும் என்று என்னையிந்த
மனுசன் புடுங்கியே தின்னப் போறான்
வீட்டுல என்ன சொகத்தக் கண்டேன் ? இந்த
வெத்து மனுசனை கட்டிக்கிட்டு ? என
நீட்டி மூழக்கி வசை பாடும் சின்ன
நீலா வதிக்கோ பெருங்கோபம்

சம்பள நாளிது வீட்டிலிருக்கிற
சந்தோ'மெல்லாம் பறந்திடும் நாள்
வம்பு தும்புகளும் பேசிடும் நாள் இவர்
மண்டையுடைத்திடும் நாளிதடா
கம்பு தடிகளைத் தூக்கிடும் நாள் பொலிஸ்
கச்சேரி கோட்டுக்குப் போயிடும் நாள்
வெம்பியழுதிடும் பெண்களின் குரல்கள்
வீடுகளில் கேட்கும் நாளிதடா

1.இக்கவிதை மூலம் கவிஞர் வெளிப்படுத்த விழைந்தவை யாவை?
2. இக்கவிதையில் இடம்பெற்றுள்ள இணை மொழி யாது?
3.பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துத் தருக:

i. சித்தம்
ii கூச்சல்
iii பாடை
iv நாதாறிப்பசங்கள்
v புடுங்கித்தின்ன
vi வெம்பி அழுதல்
vii சிங்காரம்
ix கேவி
x சேட்டுப்பயல்

பெண் தொழிலாளர்களது அங்கலாய்ப்புகள் எவ்வாறு காட்டப்படுகிறது?

அல்லது

பாங்காக் தேசிய நூலகத்தார் அவர்களுடைய கையெழுத்துப்படியின் நுண்பட நகலை எனக்கு அன்புடன் அனுப்பி உதவினர். இ∴து இப்போது அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் உள்ளது. பாங்கொக்கில் உள்ள பிராமணர்கள் ஓதுகின்ற துதிப்பாடல்களை மலேயா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு .சிங்காரவேலு ஒலிப்பதிவு செய்திருந்தார். 1966 இல் கோலாலம்பூரில் முதல்முதல் உலகத்தமிழ் மகாநாடு கருத்தரங்கு நடந்தபோது அப்பாடல்களைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. தமிழகத்தில் அன்றாட வழிபாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள தேவாரப்பாடல்கள் (சில மட்டும்) முறை வைப்பில் முறையே திருஞானசம்பந்தர் , அப்பர்,சுந்தரர் ஆகியோரால் பாடப் பெற்ற முதற் பதிகங்கள் முதலிடம் பெறுகின்றன.இவ்வழக்கினை உறுதி செய்தது போல இம்மூன்று பாடல்களும் பாங்கொக்கில் பாடப்பெற்றன. ஆனால் வைணவ சமய நூலாகிய திருப்பாவையில் இருந்து ஏன் ஒரு பாடலுமே அங்கில்லை என்பது தெளிவாகவில்லை. அங்கே விஷ்ணு சுகோதயப் பெருமாள் என்று வழங்கப்பெற்றாலும் பாங்கொக்கில் தீவிர வைணவர்கள் யாரும் இல்லை. சுகோதயா என்பது தாய்லாந்தின் ஒரு பெயர். பெருமாள் என்பது தமிழில் விஷ்ணுவின் பெயர். இத்திருமாலே இங்கு இவ்வாறு நாட்டுத் தெய்வமாக மாறியுள்ளார்.அங்குள்ள பிராமணர்கள் கலப்புமணம் செய்து கொண்டதன் விளைவாக மலேயா மக்களோடு ஒன்றிவிட்டனர். ஆனால் இன்னமும் கூட அவர்கள் இராஜகுருக்கள் என மரியாதை செலுத்துகின்றார்கள்.வாமதேவன் என்பது போன்ற அவர்களின் பெயர்கள் சைவ ஆகமங்களின் செல்வாக்கை நமக்கு நினைவூட்டுகின்றன.கீழை நாடுகள், ஆபிரிக்கா முதலியவற்றில் வழங்கும் மொழிகளைக் கற்பிக்கும் லண்டன் பள்ளியைச்சேர்ந்த டாக்டர் ஜான்மார் கையெழுத்துப்படிகளில் உள்ள செய்திகளைப்படித்து வெளியிட முற்பட்டபோது நாராயணனே நமக்கு பறை தருவான் என்ற திருப்பாவை அடி ஒன்றினைக் கண்டறிந்தார். சென்ற ஆண்டு மதுரைக்கு அவர் வந்தபோது என்னிடம் அதைக் குறிப்பிட்டார். இக்கண்டுபிடிப்பு திருப்பாவையும் பண்டை நாட்களில் அவர்களது தேசிய திருவிழாவில் பாடப்பெற்றது,என்ற செய்தியை மெய்ப்பிப்பதற்கு இன்றியமையாச்சான்றாக இலங்குகிறது.

1. பாங்கொக்கில் பாடப்பட்டவை எவை?
2. இங்கு வைணவம் இருந்ததற்கான சான்றுகள் எவை?
3. இன்று இவ்வாய்புக்கு உதவியவர்கள் யாவர்?
4. இன்றும் அதன் சிறப்பு எவ்வாறு மெய்ப்பிக்கப்படுகிறது?

(16புள்ளிகள்)

பகுதி 11

இப்பகுதியில் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக:

3. ‘வினைத்திட்பம்’ என்ற அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்டு கீழ்வரும் தலைப்புகளில் விடையளிக்கவும்.

   i) ‘வினைத்திட்பம்’ அதிகார வைப்பு முறை.

   ii) வினைத்திட்பமாவது யாது? அதன்பகுதி எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

   Iii )வினைத்திட்பமுடையார் எய்தும் பயன்கள்

   Iv )வினைத்திட்பம் இல்லாரது இழிவுகள்

(20 புள்ளிகள்)

4. வசிட்ட முனிவர் முடி சூட்டுவிழா மண்டபத்தை அடைந்தது முதல் இராமன் தேரில் ஏறி தசரதன் மாளிகை அடைந்தது வரையுள்ள பகுதியில்

   i)தேரேறிச் சென்ற இராமனைக் கண்ட மக்கள் அடைந்த மகிழ்ச்சியை எழுதுக:

   ii)முனிவர்,முதியோர்.இளைஞர் அடைந்த மகிழ்ச்சியை எழுதுக:

   iii)அவர்களின் உரையாடலினூடாக வெளிப்படுத்தப்படும் இராமனது பெருமைகளைத் தருக:

(20 புள்ளிகள்)

5)

i)சாப விமோசனம்' என்ற கதையூடாக ஆசிரியர் கூறவந்த வாழ்வியல் அம்சங்களை விமர்சிக்குக:

ii)'சாபத்திற்கு விமோசனம் உண்டு பாவத்திற்கு விமோசனம் இல்லை' என்ற உண்மை அகல்யை என்ற பாத்திரமுடாக எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

iii)பாத்திரங்களின் உருவாக்கத்திலும், உள்ளடக்கத்திலும் புதுமைப்பித்தன் ஒரு யதார்த்தவாதி என்பதனை நிருபித்துள்ளார் ஆதாரங்களுடன் குறிப்பிடுக:

(20 புள்ளிகள்)

6. 'நீராட்டம் பகுதியில் (பெரியாழ்வார் திருமொழியில்) பெரியாழ்வார் கண்ணனை நீராட அழைக்கும் பாங்கினூடாக வெளிக்கொணரப்படும் விடயங்களை பின்வரும் தலைப்புகளில் விளக்குக:

i) பாடலில் இடம்பெறும் பல்லவர் கால இலக்கியப்பண்புகள்
ii) அமைப்பிலும் பொருளிலும் கண்ணன் மேல் கொண்ட ஈடுபாடு புலப்படுவது
iii) கண்ணனுக்குப் பிடித்தமான விடயங்களும் சிற்றுண்டிகளும்
iv) கண்ணன் செய்யும் குறும்புகள் , கம்சன் அனுப்பிய அசுரர்கள்
v) பெரியாழ்வார் கையாண்ட நுட்பங்கள்

(20 புள்ளிகள்)

7. 'சீபர்ப்பதம்'' பதிகத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய பதிகத்தை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:

i) 'சீபர்ப்பதம்'' என்பதன் மறுபெயர் என்ன?
ii) யானைக் கூட்டங்களின் செயல்கள்
iii) தினைப்புனங்காக்கும்குறமகளும் கிளியும் இவற்றினூடாக வெளிப்படுத்தும்விழுமியக்கருத்துக்கள்
iv) மான்,மரை,மயில், பன்றிகளின் செயற்பாடுகள்

(20 புள்ளிகள்)

8) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக:

i) "யாதுமூரே யாவரும் கேளீர்" எனத் தொடங்கும் புறநானூற்றுச் செய்யுள் தரும் செய்திகள்
ii) "வெறுஞ்சோற்றுக்கே வந்தது" என்ற சிறுகதையில் வெளிப்படுத்தப்படும் விழுமியப்பண்புகளும் படிப்பினைகளும்
iii) "நீண்டபயணம்' என்ற நாவலில் அடிநிலை மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள்
iv) "கத்துக்கடல் சூழ்நாகைக்காத்தான் …" எனும் பாடலினூடாக வெளிப்படுத்தப்படும் சிறப்புகள் எவை?
v) 'மனவலிமை வேண்டும்' என்ற கட்டுரையில் சுற்றுப்புறம் , உடம்பு ,மனம் பற்றிக் குறிப்பிடப்படும் செய்திகள்

(20 புள்ளிகள்)